Registered as a Newspaper


* டென்னிஸ்
* டேபிள் டென்னிஸ்
* உதைபந்தாட்டம்
* கிரிக்கெட்
* கரபந்தாட்டம்

உட்பட சகல உள்ளக வெளிக்கள மைதான விளையாட்டு உபகரணங்களுக்கும்

யாழ் எண்டர்பிறைஸ்
516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

விலை ரூ 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை



விளையாட்டு வீரர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்
நவீன, தரம்வாய்ந்த விளையாட்டு உபகரணங்களுக்கு
யாழ். எண்டர்பிறைஸ்
516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு சித்திரை மீ 9 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 12 (22.04-1986) UTHAYAN ■ A LIVELY TAMIL DAILY கதிர்:132

## தொண்டமானாறில் மோதல்

# சந்நிதி தேர் தீக்கிரை

# எட்டு சிப்பாய்கள் பலி

## அர்ச்சகர் உட்பட மூன்று

### பொதுமக்களும் உயிரிழப்பு

### மற்றும் பலர் இறந்திருக்கலாம் என அச்சம்

— அலுவலக, பலாலிச் செய்தியாளர்கள் —

பலாலி, ஏப். 22

தொண்டமானாறில் ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை பெரும் நேரடி மோதல் நடந்தது.

அந்த மோதலின் விளைவாக எட்டு சிப்பாய்கள் மரணமானார்கள். மற்றும் சிலர் காயம் அடைந்தனர்.

பொதுமக்கள் மூவரும் இச்சம்பவத்தில் பலியானார்கள். அவர்களில் ஒருவர் கோயில் அர்ச்சகர். மற்றும் பலர் இறந்திருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

மோதல் சம்பவத்தின் எதிரொலியாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் பல லட்சம் பெறுமதியான புதிய சித்திரத்தேரும் தீக்கிரையானது. கோயில் மடம் ஒன்றும் எரிந்தது.

சந்நிதி முருகனின் சித்திரத்தேர் எட்டுச் சில்லுத் தேர். இலங்கையிலேயே பிரசித்தமானது.

சம்பவம்பற்றி அறியப்படுவதாவது:

நேற்று அதிகாலை சுமார் 5 மணி இருக்கும். தொண்டமானாறு இராணுவமுகாமில் இருந்த தொண்டமானாறு கடல் நீரேரித் தண்ணீரைத் தடுக்கும் இரும்பிலாலான துரிசுக்கூடு வழியாக செல்வச்சந்நிதி கோயிலை நோக்கி சிப்பாய்கள் நடந்து வந்துகொண்டிருந்தனர்.

### எதிர் தாக்குதல்

அப்பொழுது போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்திச் சிப்பாய்களைச் சந்திவளைத்தனர்.

ரொக்கட்லோஞ்சர்களாலும், மோட்டார் ஷெல்களினாலும், துப்பாக்கிகளாலும் சிப்பாய்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் கடும்சமர் மூண்டது.

தொண்டமானாறு முகாமில் இருந்தும் 'ஷெல்' நாலாபுறமும் ஏவப்பட்டது.

சுமார் இரண்டுமணி நேரம் நடந்த இந்த மோதலில் எட்டு சிப்பாய்கள் அதே இடத்தில் மரணம் ஆனார்கள் ஆறுக

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்திமுனி



கிழக்கிலே குளம் உடைக்குது, வடக்கிலே கோயில் தேர் எரியுது ...

எல்லாம் அழிவின் அறிகுறிகள் தானோ .....?

### சூட்டுக்கு பலி

வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்குச் சமீபமாக உள்ள ஆதி கோவிலடிக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 67 வயது மீனவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கடல் அலையில் அள்ளுண்ட சடலத்தை இராணுவத்தினர் கரை சேர்த்து முகாமுக்கு எடுத்துச் சென்றனர்.

# கோயில் பகுதியில் குண்டுவீச்சு!

## விமானம் ஒன்று மாலை

### 14 குண்டுகளை பொழிந்தது

பலாலி, ஏப்ரல் 22

நேற்று மாலை 6மணி அளவில் செல்வச்சந்நிதி கோயில் பகுதியில் குண்டு வீச்சு விமானம் ஒன்று 14 குண்டுகளை பொழிந்தது. இதனால் கோயில் மடங்கள் பல தரை மட்டமாகின. கோயிலுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

குண்டு வீச்சு விமானம் வருவதற்கு முன்னர் மாலை 4-30 மணி முதல் மஞ்சள்-பச்சை நிறங்களைக் கொண்ட ஹெலிக்கொப்டர் ஒன்று தொண்டமானாறு இராணுவ முகாமை அண்டி உள்ள பகுதியை தாழப்பறந்து சுட்டது. இந்தத் தாக்குதல் மாலை 6 00 மணி வரை நீடித்தது.

ஹெலிக்கொப்டர் தாக்குதல் வல்லை, வளலாய், இடைக்காடு, அச்சுவேலி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது.

இதன் பின்பே கோயில் பகுதியில் பொம்பர் விமானம் மூலம் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

ஹெலிக்கொப்டர் தாக்குதலின்போது வல்லை-அச்சுவேலிச் சந்தியில் லொறி ஒன்றை துரத்தி ஹெலிக்கொப்டர் சுட்டது. லொறியில் இருந்தவர்கள் மதகு ஒன்றுக்குள் பாய்ந்து தப்பிக் கொண்டனர்.

நேற்று இரவு 7 மணி அளவில் ஹெலிக்கொப்டர் மூன்றாவது தடவையாக வந்து சுட்டது. இத் தாக்குதல் 45 நிமிட நேரம் நீடித்தது. தொண்டமானாறை அண்டி உள்ள பகுதியிலேயே இந்த மூன்றாவது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹெலிக்கொப்டரில் இருந்து வீசப்பட்ட ஒரு திராவகத்தால் பற்றைகள் - செடிகள் எரிந்த புதிய சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

## மினிவானை நோக்கி ஹெலிக்கொப்டர் சூடு

### வல்லைவெளியில் சம்பவம்

நல்லூர், ஏப்ரல் 22

மினிவான் ஒன்றை நோக்கி ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவம் நேற்று வல்லைவெளியில் நடைபெற்றது.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

வல்லைவெளியூடாக காலை 9 மணியளவில் சென்றுகொண்டிருந்த சிறிய மினிவான் ஒன்றை நோக்கி குண்டுவீச்சு விமானம் ஒன்று பறந்து வந்தது.

அதனை அடுத்து சிறிது நேரத்தில் ஹெலிக்கொப்டரும் பறந்து வந்தது.

இதனைக்கண்ட வான் சாரதி வானை அதிவேகமாகச் செலுத்தினர்

எனினும் ஹெலிக்கொப்டர் வானைத் துரத்திச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

வானில் இருந்த பிரயாணிகள் சத்தம்போட்டுக் கத்தத் தொடங்கியதும் ஹெலிக்கொப்டரும் குண்டுவீச்சு விமானமும் தொண்டமானாறு நோக்கிப் பறந்து சென்றன.

தெய்வாதீனமாக எவருக்கும் காயமோ சேதமோ ஏற்படவில்லை.

## சிறுவன் காயம்

பருத்தித்துறை, ஏப். 22

தொண்டமானாறு, வல்வெட்டித்துறைப் பகுதியில் ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த போது நடராசா பிரபாகரன் (வயது 12) என்னும் ஊரிக்காட்டைச் சேர்ந்த சிறுவன் காயமுற்றார்.

அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி: சிப்பாய்கள் ரோந்து

### மக்கள் பதற்றம்

கிளிநொச்சி, ஏப்ரல் 22

நேற்றுக் காலை சுமார் 15 கவச வாகனங்களில் சகிதம் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சிப்பாய்கள் கிளிநொச்சி திருவையாறு, இரத்தினபுரம் ஊடாக இரணைமடு பகுதிக்கும் வட்டக்கச்சிக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

தொண்டமானாறில் நேற்று நடந்த தாக்குதல்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரி உள்ளனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் சிப்பாய்களுடன் நடந்த மோதலில் வீர மரணம் அடைந்த சுந்தன், ரமணன் ஆகியோரது இழப்புக்கு பழிவாங்கும் நடவடிக்கையே தொண்டமானாறு தாக்குதல் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய மோதலில் தமது சார்பில் எவரும் இறக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## ரூபா 9,10,600 பெறுமதியான

# யாழ் பிரதம தபால் நிலைய முத்திரைகள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப் 22

யாழ் பிரதம தபால் நிலையத்தில் இருந்து கோட்டைக்குள் இருக்கும் தபால் கந்தோருக்கு எடுத்துச் செல்லப்பட்ட 9 லட்சத்து 10 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான முத்திரைகள் இனந் தெரியாத நபர்களினால் கொள்ளை இடப்பட்டன.

நேற்றுக்காலை 9-15 மணி அளவில் இச் சம்பவம் யாழ் மத்திய கல்லூரிக்கு அருகில் நடந்தது

இது பற்றி அறியப்படுவதாவது;

யாழ் பிரதம தபால் நிலையத்தில் இருந்து சமயாசமய ஊழியர் ஒருவரின் மூலம் கோட்டையில் உள்ள தபால் நிலையத்துக்கு 100 ரூபா, 50 ரூபா, 20 ரூபா பெறுமதியான முத்திரைகள் அனுப்பப்பட்டன.

அந்த ஊழியர் பை ஒன்றினுள் முத்திரைகளைப் போட்டுக் கொண்டு சைக்கிளில் கோட்டைக்கு சென்று கொண்டு இருந்தார்.

மத்திய கல்லூரியை அண்மியதும் வான் ஒன்றில் வந்த இனந் தெரியாத நபர்கள் ஊழியரை மறித்து, அவரை வானில் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றனர். முத்திரைகளை எடுத்துக் கொண்ட பின்னர் வெற்றுப்பையுடன் ஊழியர் அனுப்பி வைக்கப்பட்டார்.

இது சம்பந்தமாக யாழ் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது தீவிரமான விசாரணை ஒன்றும் பிரதம தபால் நிலையத்தில் நடந்தது.

## முன்னாள் மேயர் கைக்குண்டு வீச்சுக்குப் பலி

கொழும்பு, ஏப் 22

மாத்தளை முன்னாள் மேயர் திரு. எஸ். தம்பிராஜா கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமானார்.

மாத்தளையில் உள்ள அவரது வீட்டு முற்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.00மணி அளவில் அவர் தமது குடும்பத்தினருடன் இருந்த சமயம் இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டது.

திரு தம்பிராஜா விட்டிலேயே மரணமானார். அவரது மனைவியும், இரண்டு பிள்ளைகளும் காயம் அடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்

# கந்தளாய் குளம் இப்போது வெறும் நிலமாக காட்சி அளிப்பு

### மாண்டவர் எண்ணிக்கை இன்னும் ஊர்ஜிதமில்லை

### 14 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்பு

திருகோணமலை, ஏப் 22

கந்தளாய்க்குள அணைக்கட்டு உடைப்பினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் அடிபட்டு இறந்து போனவர்களில் 14 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன.

நாற்றுக் கணக்கானோர் இறந்து இருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

எட்டுப்பேருடன் சென்ற மீட்புப்படகு ஒன்றும் வெள்ளத்தில் அள்ளுண்டு போனது பட்டில் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

கந்தளாய்க் குளத்தில் இருந்த நீர் முழுவதும் வற்றி வெறும் நிலமாகக் காட்சியளிப்பதாக அங்கு போய்வந்தவர்கள் கூறுகின்றனர்.

ஒரு பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை ஹெலிக்கொப்டர் மூலம் காப்பாற்ற முயற்சிக்கப்பட்டது. அச்சமயம் ஹெலிக்கொப்டரில் இருந்து தவறி குழந்தை ஒன்று வெள்ளத்தில் விழுந்து விட்டது.

வெள்ளம் தம்பலகமம் இராமத்தைச்சூழ்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. தம்பலகமம் கோணேஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி வெள்ளம் எட்டு அடிவரை நிற்பதாக அறிவிக்கப்படுகிறது.

## கந்தளாய் சொல்லும் கண்ணீர்க் கதைகள்

திருகோணமலை, ஏப்ரல் 22

கந்தளாய்க் குளம் உடைத்த பின்னர் இடம் பெற்ற கண்ணீர்க் கதைகள்;

திடீரென்று வெள்ளம் வீட்டினுள் புகுந்தது. ஓடிப்போய் வெளியே இருந்த மரத்தில் ஏறினேன். குழந்தைகளும் என் பின்னால் தொற்றிக் கொண்டு ஏறினார்கள்.

திடீரென்று வெள்ளம் அதிகரித்தது. பெரிய பிள்ளைகள் எல்லாம் உயரே ஏறத் தொடங்கினார்கள்

சிறிய பிள்ளை ஒன்றினால் ஏறமுடியாமல் போய் விட்டது.

என் கண் முன்னாலேயே வெள்ளம் அந்தக் குழந்தையை அடித்துக்கொண்டு போய்விட்டது.

இப்படி ஒரு தாய் குமுறியபடி கந்தளாய் ஆஸ்பத்திரியில் வைத்துச் சொன்னார்.

*

மரங்களில் தொங்கிக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்ற ஹெலிக்கொப்டர்களில் இருந்து கயிறுகள் தொங்கவிடப்பட்டன.

பலமணி நேரம் மரங்களில் இருந்ததினால் கைகள் தண்ணீர் பட்டு விறைத்து இருந்தன.

ஹெலிக்கொப்டரில் இருந்து போடப்பட்ட கயிறுகளைப் பிடித்துக்கொண்டு தப்ப முயற்சித்தார்கள்.

குழந்தைகள், வயோதிபர்கள் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏற முயற்சித்தனர்.

கைகள் விறைத்த காரணத்தினால் அவர்களால் ஏற முடியவில்லை. அப்படிக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏற முயற்சித்த சிலர், இடையில் நழுவி விழுந்து அடித்துச் சென்ற நீரிலே அள்ளுண்டு மறைந்து போனார்கள்.

*

ஹெலிக்கொப்டரின் கயிற்றின் உதவியுடன் தாய், தந்தை சில குழந்தைகளும் ஏற்றப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் நேற்று ஹர்த்தால்

பருத்தித்துறை, ஏப் 22

பருத்தித்துறையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இரு தினங்களுக்கு முன் சிப்பாய்களுக்கும் போராளிகளுக்குமிடையே நேரடி மோதல் ஏற்பட்டது. அச்சமயம் இரண்டு போராளிகள் பலியானார்கள். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளான லெப்டினன்ட் ரமணன் ஜெயம் (பிரேமச்சந்திரன் வல்வெட்டித்துறை), லெப்டினன் சுந்தன் ரவி, (எம்மன் சத்தியசீலன் - தும்பளை) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

நேற்று வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகளும், வாழை, சமுகு, இதல்ஜோலைகளும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. கடைகளும், பொதுசனச் சந்தையும் மூடப்பட்டிருந்தன.

தனியார் மினிபஸ் போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒருசில பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இதற்கிடையில் நேற்று முன்தினம் சிப்பாய்களின் ஷெல் தாக்குதல்களும் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களும் இடம் பெற்றன.

மாதனை, கலட்டி, பருத்தித்துறை, வராத்துப்பளை உபயகதிர்காமம் ஆகிய பகுதிகளில் கடற்படையினரின் பீரங்கிக்குண்டுகள் வந்துவிழுந்தன. இதனால் சில வீடுகள் சேதம் அடைந்தன.

## சுபநேரம்

22--4--1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 31 முதல் 12 01 வரை
ராகுகாலம்:
3 01 முதல் 4.31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்
உமாபதி சிவாச்சாரியார் குருபூஜை

## புதிய யோசனைக்கும் தமிழர் அபிலாஷைகளுக்கும்

### இடையில் பெரிய இடைவெளி!

புதுடில்லி, ஏப்ரல் 21

வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீதுவுடன் திரு. ரோமேஷ் பண்டாரி நடத்திய பேச்சுக்கள் தமிழர் அபிலாஷைகளுக்கும் இலங்கையின் புதிய யோசனைகளுக்கும்இடையில்உள்ள பெரும் இடைவெளியை குறைக்க உதவவில்லை.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் திரு ஜி கே. ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார்.

தமிழர்கள் வகைதொகை இன்றிக் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டால் ஒழிய உடன்பாடான முறையில் பேச்சுக்களை நடத்த இயலாது என்று திரு. பண்டாரி, ஜனாப். ஹமீதுவிடம் எடுத்துக் கூறிவிட்டார்.

சட்டம், ஒழுங்கு மற்றும் அதிகாரங்கள் பற்றிப் பேசலாம் என்று இணங்கினாலும் வடக்கு-கிழக்கு இணைப்பு பற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்படுகின்றன

## கிராமங்கள், கடல், வாவி, காடுகளில் தேடுதல்

மட்டக்களப்பு, ஏப் 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் தீவிரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக்கப்பட்டு வருகின்றன.

கடல் வழியாக தீவிரவாதிகள் நடமாடுவதாக டை வட்டாரங்கள் கருதுவதையடுத்து கடலிலும், வாவியிலும் நடமாடும் வள்ளங்கள், தோணிகள் மீது கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இடையிடையே ஹெலிக்கொப்டர்கள் தாழ்வாகப் பறந்து கடல், வாவி பகுதியில் வட்டமிடுகின்றன.

அதேநேரம் வாவியில் ஆயுதப்படையினர் படகு மூலமாக திடீர்ரோந்து செய்கிறார்கள்.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையச் சுற்றுடல் வீதிகளில் ஆழமான குழிகள் மீண்டும் வெட்டப்பட்டு வாகனப் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

இதனை நகருக்கு பயணியர் வீதி வழியாக மட்டுமே செல்லவேண்டியிருக்கிறது.

இதேவேளை இம்மாவட்டத்திலுள்ள காடுகளிலும் தேடுதல் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது

இத்தேடுதல் நடவடிக்கைகளுக்காக ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்படும்.

கிராமங்களில் ஆயுதப் படையினரின் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இது இவ்வாறிருக்க, இம் மாவட்டத்தில் மேலும் ஆயுதப்படை முகாம்கள் நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இம் முகாம்கள் வவுணதீவு, ஆயித்தியமலை, சிப்பிமடு உட்பட சில முக்கிய இடங்களில் அமையலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை அ. தி. மு. க. கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 22

லிபியாமீது தாக்குதல் நடத்தியது, அந்நாட்டின் இறைமைமீது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் விடுக்கப்பட்ட சவால் ஆகும். நடந்து முடிந்த விமானத் தாக்குதல் திட்டமிடப்பட்ட நீண்டகால சதி. இதன் மூலம் லிபியா அதிபர் கேர்ணல் கடாபியின் இல்லம் தாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பொன். மதிமுகராஜா விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

லிபிய குடியரசின் தாக்குதல் அகில உலகத்தில் வாழும் அடக்கி ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனங்களுக்கு சவால் ஆகும்.

இத்தாக்குதல் அமெ. ஆக்கிரமிப்புக்கு கிடைத்த வெற்றி என்று அமெரிக்க அதிபர் றேகன் கருதுவாரே ஆனால் அது பகற்கனவாகும். அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நாடு என்ற முறையில் லிபிய நாட்டுக்கும் அதன் அதிபர் கேர்ணல் கடாபிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சசிதரனை விடுவிக்கக் கோரிக்கை

நல்லூர், ஏப்ரல் 22

சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் டாக்டர் சசிதரனை உடனடியாக விடுதலை செய்யுங்கள்.

இப்படி அல்வாய் மனோகரா சனசமூக நிலையம், மனோகரா கிராம அபிவிருத்திச் சங்கம், மனோகார மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் சமணந்துறை ஆலடிப் பிள்ளையார் கோயில் பரிபாலனசபை, அல்வாய் தெற்கு கிராமிய குடும்ப சுகநலத்திட்டம், மனோகரா ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையம் ஆகியவை வேண்டுகோள் விடுத்துள்ளன.

டாக்டர் சசிகரன் அல்வாயூர் பொதுஸ்தாபனங்களின் உறுப்பினராக அவற்றின் வளர்ச்சியில் தமது பங்களிப்பைச் செய்துள்ளார்.

இவரை விடுவிக்கும் படிகோரும் மகஜர்கள் யாழ் அரச அதிபருக்கும் முப்படை கட்டுத்தளபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தென்னிந்திய திரையுலகின் புதிய பின்னணிப் பாடகி சின்னக் குயில் சித்ரா.

கேரள அரசால் சென்ற ஆண்டின் சிறந்த பின்னணிப் பாடகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சித்ரா.

ஒலிப்பதிவு இருக்கும் நாட்களில் சித்ரா சென்னையில் ஒரு வாடகை வீட்டில் வசிக்கிறார். மற்ற நாட்களில் திருவனந்தபுரத்திற்குப் போய் விடுகிறார்.

இவரது தந்தையும் ஒரு பாடகர். தாயார் நன்றாக வீணை வாசிப்பாராம். தம்பி கிதார் வாசிப்பாராம்.

திருமணமாகி தோஹாவில் இருக்கும் சகோதரி பீனு, பல மலையாளப் படங்களில் பின்னணி பாடியுள்ளார்.

மொத்தத்தில் இவரது குடும்பம் ஒரு இசைக் குடும்பம்.

இதுவரை இவர் மலையாளத்தில் 122, தமிழில் 53, தெலுங்கில் 11, கன்னடத்தில் 5 - மொத்தம் 191 பாடல்களைப் பாடியுள்ளார்.

முதன் முதலாகப் பாடிய தமிழ்ப் பாடல் பாரதிராஜாவின் 'கடலோரக் கவிதைகள்' படத்திற்காகத் தான்.

இதில் கங்கை அமரனுடன் ஒரு டூயட் பாடியுள்ளார். இரண்டாவதாக 'பூவே பூச்சூடவா' படத்தில் பாடினார்.

ஆனால் முதலில் வெளிவந்தது 'நானே ராஜா நானே மந்திரி' என்ற படம் தான்.

சிந்துபைரவியில் பாடிய 'நானொரு சிந்து', 'பாடறியேன் படிப்பறியேன்' பாடல்கள் இவருக்கு நல்ல புகழைத் தேடித் தந்துள்ளன.

இதுவரை இளையராஜா, கங்கைஅமரன், எம். எஸ். விஸ்வநாதன், சங்கர்-கணேஷ், சந்திரபோஸ்- இப்படி எல்லா இசையமைப்பாளர்களுடனும் பாடிவிட்டார்.

இந்தியில் வாய்ப்பு வந்தாலும் பாடுவதற்குத் தயாராக இருக்கிறார்.

"தமிழில் கொஞ்சம் பேசவும் படிக்கவும் தெரியும் அதனால் மலையாளத்தில் எழுதி வைத்துக் கொண்டுதான் பாடுகிறேன்". இப்படி வெளிப்படையாகச் சொல்கிறார் சித்ரா.

தினசரி சினிமா

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## வைத்தியத்துறையில் ஈடுபட்டிருப்போருக்கு பொறுப்பு அதிகம்

தாளையடி, ஏப் 22

வைத்தியத் துறையில் ஈடுபட்டு உள்ளவர்கள் இழைக்கின்ற சிறு தவறுகள் கூட பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்திவிடலாம். ஏனைய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒருமுறை தாம் இழைக்கின்ற தவறுகளைத் திருத்திக் கொள்ள சந்தர்ப்பமுள்ளது. வைத்தியத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவ்வாறு செய்து கொள்ள முடியாது.

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில், ஏழு ஆண்டுகள் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி, தற்போது இடமாற்றலாகிச் செல்லும் டாக்டர் பொ. தர்மராஜசிங்கத்திற்கும் மலேரியா தடை வெளிக்கள உத்தியோகத்தர் திரு. வே. தம்பிஐயாவுக்கும் மருதங்கேணி — செம்பியன் பற்று ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலைய உறுப்பினர்களாலும், வைத்தியசாலை ஊழியர்களாலும் பிரியுபசாரம் அளிக்கப்பட்டது.

பிரியுபசாரத்திற்கு நன்றி தெரிவித்து உரை நிகழ்த்துகையில் டாக்டர் பொ. தர்மராஜசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் கே சபாரத்தினம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

டாக்டர் தர்மராஜசிங்கத்தின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் பொ. சங்கரப்பிள்ளை. வி. நடராசா, அ. சா, அரியகுமார், திருமதி கனகலிங்கம் சிவயோகம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

## மக்கள் முகம்

### சுன்னாகம் வர்த்தக சங்க நிர்வாகிகள்

சுன்னாகம், ஏப். 22

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு சுன்னாகம் நாகப்ஸ் கியேட்டரில் நடைபெற்றது.

தலைவராக திரு. எஸ். தில்லையம்பலமும், உப-தலைவர்களாக திருவாளர்கள் எம் எஸ். சதாசிவம் இ பொன்னுத்துரை ஆகியோரும் தெரிவாகினர்.

செயலாளராக திரு. கா. அரிச்சந்திராவும், உதவிச் செயலாளராக திரு. இ. தம்பிராஜாவும், பொருளாளராக திரு.எம்.ராசரத்தினமும் தெரிவாகினர்.

நிர்வாகசபை உறுப்பினராக: திரு எஸ் கிருஷ்ணராஜா, திரு சபா. புஷ்பநாதன், திரு எஸ் குருநாதர், திரு வே. அருள்ஞானசுந்தரம், திரு. எம். சந்திரசேகரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### சுன்னாகம் இந்து வாலிபர் சங்க நிர்வாகிகள்

சுன்னாகம், ஏப் 17

சுன்னாகம் இந்து வாலிபர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சுன்னாகம் ஸ்ரீமன் கதிரேசன் தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகத் தேர்தலில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: செல்லத்துரை தேவலோகேஸ்வரன், உபதலைவர்: ஞா. கிரிதரன்

செயலர்: ந. ஸ்ரீசோமாஸ்கந்தமூர்த்தி, உப-செயலர்: சபா சத்தியநாதன்,

உபபொருளாளர்: செ. குணாளன்

ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையின் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

## தடுப்புக்காவல் இளைஞர்களுக்கு சட்ட உதவி வழங்க கொழும்பில் அலுவலகம்

கொழும்பு, ஏப். 22

தடுப்புக்காவலில் உள்ள தமிழ் இளைஞர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைச்செய்து கொடுக்க கொழும்பில் ஒரு அலுவலகம் இயங்குகின்றது.

"6, அலோய் அவெனியூ, கொள்ளுப்பிட்டி" — என்ற விலாசத்தில் அந்த அலுவலகம் இயங்குகின்றது.

இவ்வுதவிகளைப் பெற விரும்புவோர், வவுனியா பிரஜைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி எம். என். எக்ஸ் சொர்ணபாலாவுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

## புங்குடுதீவில் இரு வீடுகளில் கொள்ளை

### வீதி மறிப்பு போராட்டம்

நல்லூர், ஏப்ரல் 22

புங்குடுதீவு இறுபிட்டியில் ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் இரண்டு வீடுகளில் கொள்ளை அடித்தனர்.

பெருமளவு ரொக்கப் பணம், நகைகள் அபகரிக்கப்பட்டன

இச்சம்பவத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் தனியார் வாகன சேவைகள் நிறுத்தப்பட்டன.

கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களை திருப்பித் தரும்வரை வாகன சேவை இடைநிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதனால் போக்குவரத்து சேவை அப்பகுதியில் ஸ்தம்பித்தது.

# ஜே. ஆரின். மூர்க்கம் தொடரின் விளைவு விபரீதத்துக்கு பாதை அமைக்கலாம்

## 'சோ' கூறுகிறார்

சென்னை, ஏப். 21

இலங்கையில் இந்திய இராணுவத் தலையீடு விரும்பத்தகாதது. திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் மூர்க்கம் தொடரின் விளைவு விபரீதத்துக்கு பாதை அமைக்கலாம்.

இப்போது விரும்பத்தகாதது அப்போது தவிர்க்க முடியாததாகி விடும்.

இப்படி கேள்வி ஒன்றுக்கு 'துக்ளக்' கில் 'சோ' பதிலளித்துள்ளார்.

பதிலில் 'சோ' மேலும் கூறியிருப்பதாவது;

இலங்கையில் இந்தியா இராணுவத் தலையீடு உலக அரங்கில் இந்தியாவைக் குற்றவாளியாக்கி விடும்.

நமது கடற்கரையில் வல்லரசுப் போட்டிகள் மும்முரமாகும்.

இராணுவத் தலையீட்டினால் ஈழநாடு பெற்றுக் கொடுக்க நேர்ந்தாலும் அந்த ஈழத் தமிழ் மக்கள் தலைவர்கள் ஒரு காலத்தில் இந்தியாவுக்கு விரோதமானவர்களாகவும் மாறலாம். இப்படி 'சோ' தனது பதிலில் கூறியிருக்கிறார்.

## தேசிக்காய் விலை அதிகரிப்பு

கிளிநொச்சி, ஏப். 22

கிளிநொச்சியில் தேசிக்காய் கிலோ 40 ரூபாவாக விற்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திலும் தேசிக்காய் விலை அதிகரித்துள்ளது.

## தெல்லிப்பளையில் நிபுணத்துவ சிகிச்சை

யாழ்ப்பாணம், ஏப் 22

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் இதுகாலவரை நிறுத்தி வைக்கப்பட்ட நிபுணத்துவ சிகிச்சைப் பிரிவுகள் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன,

வட மாநில சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு பிரதி மாதமும் முதலாம், மூன்றும் செவ்வாய்க்கிழமைகளில் எட்டுமணிக்கு நடக்கும். வைத்திய நிபுணர் டாக்டர் இ. இந்திரராஜா இந்த சிகிச்சையை நடாத்துவார்

கண் சிகிச்சைப் பிரிவு பிரதி மாதமும் 1ம் 3ம் வெள்ளிக்கிழமைகளில் காலை 8 மணிக்கு வைத்திய நிபுணர் டாக்டர் எஸ் வேலாயுதம் அவர்களால் நடத்தப்படும்

காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு பிரதி மாதமும் 1ம், 3ம், சனிக்கிழமைகளில் காலை 8 மணிக்கு வைத்திய நிபுணர் டாக்டர் எஸ் சிவசுப்பிரமணியம் நடாத்துவார்.

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரிக் கமிட்டித் தலைவர் திரு .இ. சபாரத்தினத்தின் முயற்சியினால் இந்த நிபுணத்துவ சிகிச்சைப் பிரிவுகள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

## மன்னார் - சங்குப்பிட்டி பாதையில் மேலதிக பஸ் சேவை அவசியம்

### 60 பயணிகள் செல்லவேண்டிய பஸ்ஸில் 200 பேர் பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 22

மன்னார்– சங்குப்பிட்டி பாதையில் மேலதிக பஸ் சேவைக்கு விடும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் - சங்குப்பிட்டி பாதையில் தினமும் ஒரு பஸ் சேவைதான் நடைபெறுகின்றது. இதனால் 60 பயணிகள் செல்ல வேண்டிய பஸ்ஸில் சுமார் 200 பேர்வரை ஏற்றப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

மன்னார் – வவுனியா – யாழ்ப்பாணப் பாதையில் [illegible] அதிகரித்துள்ளதால் யாழ் பயணிகள் சங்குப்பிட்டித்துறையையே பாவிக்கின்றனர்.

ஆகவே மேலதிக பஸ் சேவைக்கு விட்டு பயணிகளுக்கு உதவும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார், சின்னக்கடையைச் சேர்ந்த திரு. வி. என். ஆனந்தன் இவ் வேண்டுகோளை கடிதம் மூலம் விடுத்துள்ளார்.


## எங்கள் தேவை

**ஸ்ருடியோ தொழில்**

பழைய - பழகுபவர் விண்ணப்பிக்கவும். தொடர்பு கொள்ளவும்; ஸ்ருடியோ நித்யசித்ரா, சங்கானை.

**ஸ்ருடியோ விற்பனைக்கு**

ஸ்ருடியோ விற்பனைக்குண்டு (மன்னார்). தொடர்பு கொள்ளவும்; ஸ்ருடியோ நித்யசித்ரா, சங்கானை.

## LANKA CEMENT LIMITED

KANKESANTHURAI.

**முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சிமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்:**

எமது விரிவான ஆய்வின் பயனாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்புகொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

1 ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (Location Drawing) ஒன்றை அமைத்துக் கீழ்க்காணும் கேள்வுப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.

2 வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுயவிலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்வுப்பத்திர இலக்கமான LCL|SU|T|01|86 குறித்து அரக்கு முத்திரையிட்டு 25-04-1986 காலை 10.30 மணிக்கு முன் கேள்வுப்பத்திரத்துடன் 'உதவிப் பொது முகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.

3 ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறு எத்தனைப் பிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம். ஆனால் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (Location Drawing) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தக்காரரின் பெயர், சுயவிலாசம், கேள்வுப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு, கேள்வுப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10.30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்

4. (i) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு.
   (ii) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்குக் கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் தொன் ஒன்றுக்கான விலைக்கூறு.
   (iii) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக் குறைந்த தொகை களிமண்—தொன்னில்.


மேற்படி விலைக்கூறுகளைத் தங்களால் தயாரிக்கப்பட்ட 3 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9"X4" அளவுகொண்ட உறையில் இட்டு "உதவிப் பொது முகாமையாளர்", லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை என்ற விலாசமிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வுப்பத்திர இலக்கமான LCL. SU|T|01/86 எழுதி 25-04-1986 காலை 10.30 மணிக்கு முன் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்வுப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும். மேற்படி கேள்வுப்பத்திரங்கள் கேள்வுப்பத்திர முடிவு நேரமாகிய 10.30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

09-04-1986

பொது முகாமையாளர்.
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.


## அமரர் நல்லையா மார்க்கண்டு அவர்களின் 6ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 25-12-1945

உதிர்வு : 25-11-1985

திதி: 22-04-1986

இல்லையென்று சொல்லாது எமக்குதவி பல புரிந்து
எப்பொழுதும் உறுதுணையாய் இருந்த
பெருங் குணவள்ளல்
நல்லையா மார்க்கண்டு அகாலமாய்
எமைப் பிரிந்தாய்
நீ செய்த உதவிகளை நினைந்து
மனம் உருகுகின்றோம்
நல்லவிளைவுண்டாக நெல்வயல்கள்
உழுது தந்தாய்
நாமுனக்கு முற்கூலி நாடியே தரவில்லை
வல்லவிதி செய்தசதி வாழஉனை விடவில்லை
வாழும்வரை நாம் மறவோம்
வணங்குகிறோம் சாந்திபெற.
முருகனுக்கு முன் நின்று
திருப்பணிகள் பல செய்து
முழுநிறைவாய்ப் பூசை செய்ய
ஒழுங்குகளைச் செய்தாயே
பெருமளவிற் பொருளுதவிப்
பெருந்தானம் செய்தாயே
பெருமையுடன் நீ வாழ
வழியின்றிப் போனதுவே
கரும மெதுவானாலும் கடவுளிலே
பழி போட்டுக்
கடவுள் செயல் என்றிருப்போம்
கவலைவிட்டு வாழ்ந்திடுவோம்.

பூநகரிப் பகுதி விவசாயப் பெருமக்களும்
உற்றார், உறவினர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எதனையேனும் பற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் எழுமேயானால், தனியான இடத்தில் தங் கண்ணீர் மல்க ஆண்டவனையே வேண்டுக. அவன் உன் மனதில் உள்ள அழுக்கையும் துயரத்தையும் போக்குவான்; பின்பு உனக்கு எல்லாவற்றையும் விளங்கும்படி செய்வான்.

- அன்னை சாரதாதேவி. -

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 24085, 22073

22 04- 86 த டெ. 23

## பெங்களூர் மாநாடு

இலங்கை இனப் பிரச்சினை சம்பந்தமான மாநாடு ஒன்று பெங்களூரில் நடந்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக அன்றி, பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் அக்கறை உள்ள பிரமுகர்கள் இந்த மாநாட்டை நடத்தினார்கள்.

இலங்கையையும் இந்தியாவையும் சேர்ந்த சமாதான விரும்பிகள் — சமாதான அணியினர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர் காந்தி சமாதான இயக்கத்தின் தலைவர் திரு ஆர் ஆர். திவாகர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்

இனப்பிரச்சினை காரணமாக தமிழர்களும் சிங்களவர்களும் வீணாகச் செத்தொழிகிறார்கள். அதனை நிறுத்தி சமாதானத்தீர்வு காண்பதில் அரசியல் மட்டத்தில் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை காலம் கடந்து போகிறதே அன்றிக் கருமம் ஈடேறுவதாக இல்லை.

ஆகையால் மக்கள் மட்டத்தில் இப்பிரச்சினைக்கான ஒரு நல்ல தீர்வுத் திட்டம் வகுக்கப்பட்டு அதனை அமுல் நடத்துமாறு அரசாங்கம் வற்புறுத்தப்பட வேண்டும்

தமிழ் மக்கள் தனித்துக் கேட்கும் தீர்வை யு. என் பி. அரசாங்கம் காதிலாவது போட்டுக்கொள்ளுமா என்பது சந்தேகம்.

நியாய சிந்தையுள்ள தமிழ் - சிங்களப் பிரமுகர்கள் சேர்ந்து வகுக்கும் ஒரு நீதியான தீர்வுத் திட்டத்தையாவது அரசு முழுக்க முழுக்க ஏற்று நடைமுறைப்படுத்த விரும்புமா என்பபதும் சந்தேகமே

எனினும் சிங்களப் பிரமுகர்கள் நினைத்தால், தமிழ் மக்களுக்கு உள்ள உண்மையான பிரச்சினைகளைச் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லலாம். அதன் மூலம் அரசியல் மட்டத்தைத் தாண்டி தேசிய மட்டத்தில் பிரச்சினைக்குத் தீர்வு காண வழி வகுக்கலாம்.

ஆகையால் தமிழ் - சிங்களப் பிரமுகர்கள் சேர்ந்து சமாதானத் தீர்வை நோக்கி உழைக்க முன் வந்தமை வரவேற்கத் தக்கது. அவர்களுடன் இந்தியாவைச் சேர்ந்த பிரமுகர்களும் ஒரே அணி நின்று பணிபுரிய முன்வந்தமையும் பாராட்டத்தக்கதாகும்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்தியாவும் ஒரு முக்கிய பங்காளியாகி விட்டது அதனால் இந்தியப் பிரமுகர்களும் இதில் சேர்ந்திருப்பது தமிழரும் சிங்களவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை, சமநிலைத்துவமான திட்டத்தை உருவாக்க வழி செய்யக்கூடும்.

எனினும் அந்த அணியில் உள்ளவர்கள் வெறுமனே கூடிப் பேசுபவர்களாக இல்லாமல் செயல் வீரர்களாக இருப்பது அவசியம். பக்க சார்புள்ள அப்பழுக்கற்ற சிந்தனை உள்ளவர்களாக, சரியெனப்படுவதை துணிச்சலாக எடுத்து முன்வைக்க வல்லவர்களாக இருப்பது பிரதானம்.

சமாதான அணியில் இலங்கைத் தமிழர் சார்பில் இன்னும் பல உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளக்கமான முறையில், விரிவான முறையில் எடுத்துச் சொல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

சமாதான அணியின் பெங்களூர் மாநாட்டில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது தீர்மானத்தின் இரண்டாவது பகுதி வடக்கு—கிழக்கு இணைப்பினால் இன அமைப்பில் சில தாக்கங்களைக் கொண்டு வந்து விடும் என்று கூறுகிறது

வடக்கும்—கிழக்கும் சேர்ந்ததுதான் தமிழர்களின், தமிழ் பேசும் மக்களின் தாயகம். சுதந்திரத்துக்குப் பின்னரே கிழக்கில் பல மாற்றங்கள் வந்தன.

சுதந்திரத்திற்குப் பிறகு தமிழர் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு இதுவரையில் இல்லை. ஆகையால் புதிய தீர்வு என்று ஒன்று வரும் போது சுதந்திரத்துக்கு முந்திய அமைப்பு நிலையே கருத்திற் கொள்ளப்பட வேண்டும்

சமாதான அணியில் உள்ளவர்களும் தமிழர் நிலையை அரசாங்கம் பார்க்கும் கண்ணுடன் பார்த்தால் அணியினால் எதையும் சாதித்துக்கொள்ள இயலாது போகும்.

எனவே சமாதான அணியில் உள்ள பிரமுகர்கள் ஒரு பக்கப் பார்வை உள்ளவர்களாக அன்றி இரு பக்க சம பார்வையும் நேசிய சிந்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

அத்தகைய உறுப்பினர்கள் இல்லாத அணியினால் எதனையும் சாதித்துவிட முடியாது என்பது மட்டும் நிச்சயம்

# ஹீத்ரோவில் அமெரிக்க விமானங்கள்

## தங்குவதைத் தடுக்க முடியாது என்கிறார் பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர்

லண்டன், ஏப். 21

அமெரிக்க விமானங்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து போய் வருவதை தடை செய்ய முடியாது.

இவ்வாறு பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் ஜெப்றி ஹோவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு பிரிட்டனின் ஆதரவுபற்றி பத்திரிகையாளர் கேட்ட போதே ஹோவ் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

லிபியாவைத் தாக்குவதற்கு அமெரிக்கா பயன்படுத்திய குண்டு வீச்சு விமானங்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்தே எழுந்து வந்ததாக ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் ஆதரவு வழங்குவதை மேற்கு நாடுகளும் கண்டித்துள்ளன.

இதற்கிடையே அமெரிக்க 111 ரக அதிவேக குண்டுவீச்சு விமானச் சிதைவுகளை லிபியா ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஷித்தே வளைகுடா பகுதிக் கடலில் கிடந்த இந்த விமான சிதைவுகளை லிபியா எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத் தாக்குதல்களை அமெரிக்க படைகள் லிபியாமீது நடத்திய போது லிபியாவிலிருந்து எதிர்த் தாக்குதல் முடுக்கி விடப்பட்டதாகவும் அமெரிக்க விமானங்கள் சில அப்போது கடுமையாக அடிபட்டதாகவும் லிபியா ஏற்கனவே கூறி இருந்தது.

## நிக்கரகுவாவில் புதிய திட்டங்கள்

### அரசு நடைமுறைப்படுத்த இருப்பதாக அறிவிப்பு

மனாகுவா, ஏப்ரல். 21

புதிய பொருளாதார நிதித்திட்டங்களை நடைமுறைப்படுத்த நிக்கரகுவா அரசு தீர்மானித்துள்ளது.

விவசாய உற்பத்திப் பொருத்த விலைகளைக் கூட்டியுள்ளதுடன் ஊழியர்களின் ஊதியமும்கூட்டப்படுவதாக அரசு வெளியீடொன்றில் அறிவிக்கப்பட்டது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கையின் அங்கமாக பலபொருள்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

1986இல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவதாத் தெரிவித்த அரசு அறிக்கையில்.

தேசத்தினுடைய பாதுகாப்பை பலப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படும், அடிப்படைத் தேவைகளுக்காக அதிகரிக்கப்படும் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படும். கடன் கொள்கைகளும் மூலதனக் கொள்கைகளும் தேசத்தின் பொருளாதாரத்துடன் சேர்ந்து போகக் கூடியதாக சரி செய்யப்படும். மொத்தத்தில் உழைக்கும் வர்த்தகத்தின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கமே இதன் அடி அத்திவாரம் ஆகும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரக் குற்றவாளி பங்களூரில் கைது

### 45 பெண்களை இந்த நபர் கொலை செய்ததாகத் தகவல்

புதுடில்லி, ஏப்ரல 21

தலையில் பாறுங்கல்லைத் தூக்கிப் போட்டு 45 பெண்களைக் கொன்ற கொலைகாரனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பங்களூர் நகர தென் பகுதியில் வைத்து இந்த நபர் கைதுசெய்யப்பட்டதாக பி.ரி.ஐ. செய்தி ஏஜன்சி தெரிவித்துள்ளது.

சங்கரபபா என்ற இந்த நபர் தெய்வப் பலிக்கு தம்மை அர்ப்பணித்த பெண்களை ஆசைகாட்டி அழைத்துச் சென்று அவர்களிடம் இருந்த சிறுதொகைப் பணத்தையும் பிடுங்கிக்கொண்டபின் இரக்கமின்றிக்கொலை செய்ததாக செய்தி ஏஜன்சி மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் 21 தடவைகள் இந்த நபர் குற்றம் சாட்டப்பட்டதாகவும் 10 வருடங்கள் சிறையில் தள்ளப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்க பிரஜைகள் வெளியேற்றம்

சூடானிலிருந்து 175 அமெரிக்க பிரஜைகள் கென்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த வாரம் அமெரிக்க தூதரக ஊழியர் ஒருவர் சுடப்பட்டதை அடுத்து எழுந்துள்ள அச்சம் காரணமாக பாதுகாப்பு முன் ஏற்பாடாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த பிரஜைகளில் அமெரிக்க தூதரக ஊழியர்களும் உட்படுவர்.

இதனிடையே லிபியா மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு எதிராக அரபு நாடுகள் அந்த நாடுகளில் தங்கியுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் பிரஜைகளை வெளியேறுமாறு கட்டளை பிறப்பித்துள்ளன.

## வெளி உலகில்

அணிசேரா நாடுகளின்—

## எழுத்து மூல ஆதரவு வாசகம் கடாபியிடம் கையளிப்பு

### பிரதிநிதிகள் குழு லிபியாவிலிருந்து நியூயோர்க் பயணம்

புதுடில்லி, ஏப்.21

அணிசேரா நாடுகள் அமைப்பைச் சேர்ந்த 6 நாடுகளின் பிரதிநிதிகள் குழு லிபியாவுக்கு தமது ஆதரவை உறுதி செய்யும் எழுத்து மூலமான வாசகத்தை கேர்ணல் கடாபியிடம் கையளித்துள்ளது.

பாரத வெளியுறவு அமைச்சர் பலிராம் பகத் தலைமையில் சென்ற இந்த 6 நாடுகளின் பிரதிநிதிகளும் திரிபோலி விமான நிலையத்தில்பிரதம இராணுவ ஜெனரலால் வரவேற்கப்பட்டனர்.

லிபியா மீதான அமெரிக்க தாக்குதல் நடவடிக்கைகளுக்கு எதிராக தமது ஆதரவைத் தெரிவித்த பிரதிநிதிகள் குழு அங்கிருந்து நியூயோக்கிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைப் பணியகத்தில் அணிசேரா நாடுகளின் புதுடில்லி கூட்ட தீர்மானங்களை பிரதிநிதிகள் குழு கையளிக்கும் எனத் தெரிகிறது.

## போலி வெற்றி என்கிறது ஐ. தே. க.

கொழும்பு, ஏப் 22

அக்மீமன இடைத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வெற்றி போலியானது ஒன்று.

இப்படி ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் நந்தலால் பெர்னாண்டோ சொன்னார்.

குறைந்தளவு பெரும்பான்மையுடன் தான் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றது. இவ்வெற்றி குறித்து அவர்கள் பெருமை கொள்ளமுடியாது.

இப்படி திரு நந்தலால் பெர்னாண்டோ சொன்னார்.

# பரிசுத்திட்டம் நல்ல படைப்புகளை ஊக்குவிக்கும்

## நிறைவு விழாவில் வித்தி

யாழ்ப்பாணம், ஏப். 22

பல ஆண்டுகளாக சாகித்திய மண்டல தமிழ் பிரிவு இயங்காதிருக்கின்ற சூழ்நிலையில் யாழ் இலக்கிய வட்டத்தின் தமிழ் நூல்களுக்கு பரிசில் வழங்கும் திட்டம் நல்ல படைப்புகளை ஊக்குவிப்பதாக அமைகிறது. இது காலத்தின் தேவை.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ் இலக்கிய வட்டத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஈழமுரசு ஆசிரியர் திரு. எஸ் திருச்செல்வம், உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் திரு. ம வ. கானமயில்நாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தனர்.

நல்லூர் இந்து விடுதி மண்டபத்தில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

யாழ் இலக்கிய வட்ட நடப்பாண்டுத் தலைவர் செம்பியன் செல்வன் விழாவுக்குத் தலைமை வசித்தார்.

தெரிவு செய்யப்பட்ட சிறந்த படைப்பாளிகளுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் பரிசில்களை வழங்கினார்,

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

துணைவேந்தர் வித்தியானந்தன் தொடர்ந்து கூறியதாவது:

தமிழ் மக்கள் மத்தியில் யாழ் இலக்கிய வட்டம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தகவம் ஆகிய மூன்று அமைப்புகள் தொடர்ச்சியாக செயற்படுகின்றன.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கட்சி சார்புடையது. யாழ் இலக்கிய வட்டம் கட்சி சார்பின்றி செயல்படுகிறது.

எழுத்தாளர்களுக்கு அடிப்படை இலக்கணம், இலக்கிய அறிவு, ஆழ்ந்த சிந்தனை, கற்பனை, எழுத்தில் தெளிவு, சமூகத்தில் இருந்து பிரிந்து இருக்காத இயல்பு ஆகியவை தேவை. இவை எழுத்தாளர்களின் அடிப்படைத் தகைமைகளாக இருத்தல் வேண்டும்.

இப்படிக் கூறுவதால் பட்டதாரிகள் மட்டும் எழுத வேண்டும் என்பதல்ல. பள்ளி செல்லாமலே அறிவு பெற்றவர்களும் பள்ளி சென்றும் அறிவு பெறாதவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

யாழ் இலக்கிய வட்டம் போன்ற அமைப்புக்கள், பாடசாலை கல்லூரி மட்டங்களில் இலக்கிய போட்டிகளை நடத்தி மாணவர்களை இத்துறையில் ஊக்குவித்தல் அவசியம்.

இலக்கியத் திறனாய்வுகள் ஆய்வரங்குகளை நடத்தி இலக்கியத்துக்கு வளம் சேர்க்க வேண்டும்.

இப்படிக் அவர் கூறினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பரிசளிப்புரையை நிகழ்த்தினார். கவிஞர் கல்வயல் குமாரசாமி நன்றியுரை கூறினார்.

விழா ஆரம்ப நிகழ்ச்சிக்கு வட்டத்தின் முன்னாள் தலைவர் திரு. சபாரதி தலைமை வகித்தது தலைமையுரையும் நிகழ்...

## பருத்தித்துறையில் கைதான 4 மீனவரை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 22

பருத்தித்துறையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர் பற்றிய விபரங்களை பருத்தித்துறைப் பிரஜைகள் குழு யாழ் அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்து உள்ளது

ஏப்ரல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு;

1. ராமனுதன் பதமநாதன், வயது 30, நாகர் கோயில் வாசி. 6 குழந்தைகளின் தந்தை
2. தெய்வநாயகம் சோமநாதர், வயது 50.
3. சோமநாதர் யோசப் ஜெயராஜ், வயது 12
4. தங்கராஜ் உதயராஜ், வயது 26.

முதலாவது நபர் நாகர் கோயில் கரையிலும், 2, 3, 4 ஆம் நபர்கள் முனை என்ற இடத்தில் வைத்தும் கைது செய்யப்பட்டனர்.

கட்டுமரம் ஒன்றும் கண்ணாடி இழைப் படகு ஒன்றும் கடற்படையினரால் அச்சமயம் கைப்பற்றப்பட்டன.

இப்படி பருத்தித்துறைப் பிரஜைகள் குழு, அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## கரவெட்டியில் மாடுகள் இறக்கின்றன

கரவெட்டி, ஏப். 22

கரவெட்டி, வறணிப் பகுதிகளில் கால்நடைகள் மரணமடைகின்றன.

சுமார் 15 மாடுகள் இதுவரை இறந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடும் வெப்பம், புல்இல்லாமை, நோய் ஆகிய வையே மாடுகள் இறக்கக் காரணம் என்று கூறப்படுகிறது.

# இஸ்லாமிய போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வது எப்படி?

நிந்தவூர், நஸ்றுல் இஸ்லாம் இயக்கம் "இஸ்லாமிய இயக்கங்களில் இளைஞர்களின் பங்கு" என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை அண்மையில் நடத்தியது. இக்கருத்தரங்கு மௌலவி என். இஸ்மத் தலைமையில் நடைபெற்றது. கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட முக்கிய உரையை நமது அம்பாறை மாவட்ட செய்தியாளர் இங்கு தொகுத்துத் தருகின்றார்.

கருத்தரங்கில் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட சம்மாந்துறை சிறுத்தல் முஸ்லிம் இயக்கப் பொதுச் செயலாளர் ஜனாப். எம். ஐ பௌசு தீன் தமது சிறப்புரையில் பின்வருமாறு கூறினார்.

"முஸ்லிம் மக்களின் சகல பிரச்சினைகளிலும் உலாமாக்கள் பங்கு கொண்டு சரியான வழி காட்டுதல்களை அளிக்க வேண்டும்.

கலிப்படைகளால் எமது இஸ்லாமிய போராட்டங்களை ஒருபோதும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. உண்மையான மக்கள் படைகளாலேயே அது முடியும்.

இதற்காகப் புதிய தலைமையின் கீழ் ஈழ முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும். இன்று புதிய தலைமை, புதிய தலைமை என எம்மவர்கள் தேடுகிறார்கள். ஆனால், உழுத்துப்போன அரசியல் வாதிகளே மீண்டும் தலைவர்களாக எம்முன் வருகிறார்கள்.

காலனித்துவ வாதிகள் புகுத்திய தேசிய வாதம் காரணமாக இன்று முஸ்லிம்கள் ஒற்றுமையின்றி பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்கின்றோம்.

தேசிய வாதத்திடம் நாம்கண்ட தோல்வி இன்று எம்மை இந்த நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. எமக்குள் உண்மையான ஈமான் இல்லாமல் போனமையும் இதற்குக் காரணமாகும்.

ஆத்மீக அடிப்படையில் பிரிந்து கொண்ட எம்மவர்கள் இன்று இன்னொரு இனத்துடன் மோதல் ஏற்படும் பொழுதுதான் இணைப்பை ஏற்படுத்த முனைகின்றார்கள்.

உண்மையில் இஸ்லாத்தின் அடிப்படையில் எமது சமூக மாற்றம் ஏற்படும்.

இன்றுபலலேபேர்களில் பல இயக்கங்களாக முஸ்லிம்கள் பிரிந்திருக்கிறார்கள். இவை தவிர்க்கப்பட்டு நாம் ஒரே கொடியின் கீழ் ஒன்று பட வேண்டும்.

குறிப்பாக இளைஞர்களின் பங்களிப்பிலேயே எமது சமுதாய மறுமலர்ச்சி ஏற்படும் என்பதை உணர்ந்து இளைஞர்கள் செயற்பட வேண்டும்"— இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த மௌலவி. என். இஸ்மத் தமது தலைமை உரையின் போது:

"ஒவ்வொரு சமூகத்தையும் எடுத்து நோக்கினால் அந்தந்த சமூகத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் இளைஞர்களே முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளனர்.

இஸ்லாத்தை வளர்ப்பதற்கு இஸ்லாமிய சேவையில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும். இஸ்லாமிய அடிப்படையில் சமூகத்துக்கு சேவையாற்றவும் இளைஞர்கள் முன்வரவேண்டும்.

ஈமானுடைய அடிப்படையில் குர்ஆன், ஹதீஸை மையமாக வைத்து நாம் செய்யும் நல்லகருமங்களுக்கும் ... என்றார்.

மற்றும் பலரும் உரையாற்றினர்.

## மட்டக்களப்பு - யாழ் பஸ் பயணிகள் அவலம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 22

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் இ.போ.ச. பஸ் பயணிகள் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக புகார் செய்யப்படுகின்றது.

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் பஸ் சேவை தற்போது யாழ் டிப்போவினால் மட்டும் நடாத்தப்படுகின்றது. இதனால் ஆசன பதிவு நடைபெறுவதில்லை.

இந்நிலையில் பஸ்நிலையத்திற்கு பஸ் வர முன்பு டிப்போவில் வைத்து பயணிகள் ஏறிஆசனங்களில் அமர்ந்து கொள்கிறார்கள்.

இதனால் பஸ் நிலையத்தில் நிற்கும் பயணிகள் ஏமாற்றமடைந்து விடுகிறார்கள். டிப்போவில் வைத்து பயணசீட்டுவழங்கப்படுவதால் அப்பயணிகளை பஸ் நிலையத்தில் இறக்க முடியாத நிலையில் இ போ.ச. ஊழியர்கள் திண்டாடுவதை அவதானிக்கக்கூடியதாக வுள்ளது.

இந்நிலையில் இவ்விடயத்தில் இ போ ச. அதிகாரிகள் கவனம்செலுத்த வேண்டுமென பயணிகள் எதிர்பார்க்கிறார்கள்.

### பொய்யாமொழி



குறள்:

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

பொருள்:

ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும். எவற்றையும் ஆராய்ந்துபோற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில்
தரமான
போட்டோ ஸ்ரற் பிரதிக்கு
ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, Clock Tower Road,
JAFFNA.
T'Phone: 23067

உதயன்
22. 04. 1986 செவ்வாய்க்கிழமை

கலர் பிலிம் சுருள்கள் கூடிய
விரைவில் கழுவிக் (Proccessing &
Printing) கொள்வதற்கு
ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, Clock Tower Road,
JAFFNA.
TPhone: 23067

# இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சிக் குழு

## இலங்கை வரலாம் என்கிறது அரசாங்கம்

புதுடில்லி, ஏப்ரல் 21

இந்தியாவில் இருந்து அனைத்துக்கட்சித் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின, பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் திரு அதல் பிஹாரி வாஜ்பாயிடம் இது சம்பந்தமாக இலங்கை அரசின் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்.

பாரதிய ஜனதாக்கட்சி தனது மாநாட்டில், இலங்கைக்கு கட்சிக் குழு ஒன்றை அனுப்பி வைப்பது என்று எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்தே, இலங்கைத் தூதர், திரு வாஜ்பாயிடம் இதனைத் தெரிவித்தார்.

'உங்கள் கட்சிக்குழு மட்டுமல்ல, அனைத்துக் கட்சித் தூதக்குழு ஒன்று இலங்கை வந்துபோக வேண்டும். சிறிதுகாலத்துக்குப்பின்னர் இலங்கை வந்துபோகலாம்' — இப்படி திரு. பெர்னாட் திலகரத்தின தெரிவித்திருக்கிறார்.

## கைதடியில் லொறி மோதி சிறுவன் காயம்

கைதடி, ஏப் 22

சைக்கிளில் வந்த சிறுவன் லொறியால் மோதுண்டார்.

இந்தச்சம்பவம் நேற்று பிற்பகல் கைதடி விவசாய விஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக நடந்தது.

காயம் அடைந்தவர் திருஞானசர்மா ஞானசேகரசர்மா (13 வயது) என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் ஆஸ்பத்திரியில் இவர் சேர்க்கப்பட்டார்

## "சேதத்துக்கு நஷ்டஈடு வழங்குக"

நல்லூர், ஏப். 22

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ் கல்விப்பணிப்பாளருக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு ஆ. ந. இராசேந்திரன் அனுப்பி வைத்துள்ளார்

கடந்த 16ந் திகதி தெல்லிப்பழைப் பகுதியில் நடந்த விமானப் படையின் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக் கட்டடங்கள் சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## அரச பயங்கரவாதம் தொடங்கிய பின்னரே தமிழ்ப் பகுதிகளில் ஆயுதம் ஏந்தும் சிந்தனை வந்தது

### சந்திரகாசன் பேட்டி

கொழும்பு, ஏப் 21

1961 இல் எனக்கு வயது 18. அச்சமயம் வெடிகுண்டு எடுத்துச் சென்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டேன். ஆயுதம் ஏந்தும் சிந்தனை ஏற்பட்டதற்குக் காரணம் மக்களின் அபிலாஷைகளை சனநாயக முறையில் வெளிப்படுத்த முடியாது கட்டுப்படுத்தப்பட்டதே ஆகும்.

இப்படி திரு. எஸ். ஸி. சந்திரகாசன் 'தக்வக்' இற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி: சில தீவிரவாதிகள் நாட்டைப் பிரிக்குமாறு கேட்டால் அரச அவர்களுடன் எப்படி நடந்து கொள்ளும்?

பதில்: முதலில் தமிழர், அரசிடம் உரிமைகளைக் கேட்டு இராணுவப் போராட்டம் நடத்தவில்லை. 80 வருடமாக சாத்விகப் போராட்டம் நடத்தினர். இறுதிக் கட்ட இனக்கொலை ஆரம்பித்ததன் பின்னர் தான் இராணுவ ரீதியான இயக்கம் ஆரம்பித்தது.

இராணுவ இயக்கம் ஆரம்பித்தது உரிமைகளைப் பெறுவதற்கு அல்ல; இனக் கொலையைத் தடுக்கவே ஆயுதம் ஏந்தத் தொடங்கினர் இளைஞர்கள். இனக்கலவரம் முதலில் 1956இல் தொடங்கியது. இரண்டாவது இனக்கலவரம் 1958 இல் நடந்தது. அதன் பின்னர் அரச பயங்கரவாதம் திட்டமிட்ட இனக் கொலையில் ஈடுபடத் தொடங்கியது.

நான் முதன் முறையாக 1961 இல் சாத்விக போராட்டத்தில் பங்கு கொண்டேன். எனது தந்தையின் தலைமையில் நடந்த அப்போராட்டத்திலும் அரச நிர்வாகமே ஸ்தம்பித்தது. அப்போராட்டத்தை அரச பயங்கரவாதம் முறியடித்தது

சாத்வீகப் போராட்டம் பலன் கொடுக்காத நிலையில் 18 வயதான நான் வெடிகுண்டு சம்பவத்தில் கைது செய்யப்பட்டேன். சிறையில் அடைக்கப்பட்டேன். அரச பயங்கரவாதம் என்று ஆரம்பிக்கப்பட்டதோ அதன் பின்னர் தான் தமிழ்ப் பகுதிகளில் ஆயுதம் ஏந்தும் சிந்தனை ஏற்பட்டது.

இப்படி திரு. சந்திரகாசன் பேட்டியில் கூறினார்.

[திரு. சந்திரகாசனின் பேட்டியின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது.]

## கட்டுத் துவக்கு வெடித்து இளைஞன் காயம்

மாடு தரத்தச் சென்ற இளைஞன் கட்டுத் துவக்கு வெடித்து இலக்காகி கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார்.

பின்பு இவர் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

கிளிநொச்சி உடையார் கட்டு சுகந்தபுரத்தைச் சேர்ந்த செல்வராசா — ஸ்ரீகாந்தன் என்ற 17 வயது இளைஞனே கட்டுத் துவக்கு வெடிக்கு இலக்கானவர் ஆவார்.

## பிஜித்தீவில் பெரு வெள்ளம்

சூவா,ஏப்ரல். 21

பிஜித்தீவுகளில் பெரிய தீவான வெவுலில் வெள்ளப் பெருக்கும் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

10 பேருக்கு மேற்பட்டவர்கள் இந்த அனர்த்தத்தில் அகப்பட்டு உயிரிழந்துள்ளனர். பலர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

## ஈழவானொலி விசேட ஒலிபரப்பு

நல்லூர், ஏப் 22

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் நடத்தும் ஈழவானொலியின் விசேட ஒலிபரப்பு நேற்று ஆரம்பிக்கப்பட்டது

விசேட ஒலிபரப்பு 21ந் திகதிமுதல் 25ந் திகதி வரை காலை 8மணிக்கும் மாலை 4 மணிக்கும் 26ந் திகதி காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்கும் நடைபெறவுள்ளன.

புதன், வியாழன், சனி ஆகிய நாட்களில் பிற்பகல் 3 மணிக்கும் இரவு 8 30 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமையில் காலை 10 மணிக்கும் பிற்பகல் 3மணிக்கும் வழமையான ஒலிபரப்பு நடைபெறும்.

தமிழகத்தின் பிரபல கவிஞர்களான வைரமுத்து, நா. காமராசன் போன்றோரின் ஈழ விடுதலைப் பாடல்களும் அன்றைய தினங்களில் ஒலிபரப்பாகவுள்ளன.

## நான் சொல்வதை நீர் எழுதும்

### செய்தியாளரிடம் ஜனாதிபதி இப்படிக் கூறினாராம்

மெல்போர்ன், ஏப். 21

நான் சொல்வதை நீர் எழுதும்!

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, ஆஸ்திரேலிய வானொலியின் தெற்காசிய செய்தியாளர் ஜோன் மிக்ஸிடம் சொன்னார்.

கேள்வி: இந்திய வெளிவிவகார அமைச்சர் பலிராம் பகத், இலங்கையில் இனப்படுகொலை நடைபெறுவதாகச் சொல்லியுள்ளாரே!

திரு ஜெயவர்த்தன: திரு. பகத் பஞ்சாபை நினைத்துக் கொண்டார் போலும்!

கேள்வி: சிங்கள ஆயுதபடையினர் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மக்களைக் கொலை செய்வதாக அல்லவா திரு. பகத் சொல்லியுள்ளார்.

திரு ஜெயவர்த்தன: (You put down what I said) நான் சொல்வதை நீர் எழுதும். பகத் பஞ்சாபைத் தான் நினைத்துச் சொல்லியுள்ளார்.

கேள்வி போராளிகளுக்கு இந்தியா ஆயுத உதவி வழங்குகிறது என்று கூறுகிறார்களா?

திரு. ஜெயவர்த்தன: இந்தியா ஆயுத உதவி வழங்குவது பற்றி எனக்குத் தெரியாது.

தமிழ் நாடு அரசுக்குத் தெரிந்தே போராளிகள் ஆயுதங்களைப் பெறுகின்றார்கள். போராளிகள் தமிழ்நாட்டில் தான் உள்ளனர் எம்மால் அதை நிரூபிக்க முடியும்.

## எட்டு போராளிகளுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 22

கடந்த ஆண்டு ஏப்ரல் 21 இல் பலியான 8 போராளிகளுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நினைவஞ்சலியைத் தெரிவித்துள்ளது

அருண், கரிகாலன், ரஜனி, மணி, சோமு, தயா, மதன்லால், சைமன் ஆகியோருக்கு அஞ்சலி தெரிவித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

"அரச கலிப்படைகளுக்கு எதிராக ஆரம்பித்த எமது போராட்டம் இன்று புரட்சிகரமான கோஷமாக மாறியுள்ளது. மறைந்த எம் தோழர்களின் உடல்களில் இருந்து கொட்டிய குருதி எம் மண்ணில் சிவந்த புரட்சித் தீயை வளர்க்கத் தயங்காது" – இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சட்ட விரோத மின் பாவனை

உடுப்பிட்டி, ஏப். 22

உடுப்பிட்டிப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதற்கு [illegible] நிலையங்களின் ஒன்றியம் [illegible] வருகின்றது.

## தாக்குதலும் பதில் தாக்குதலும் பிரச்சினையை தீர்க்க மாட்டா

### சவூதி தூதுவர் ஹாஷிம் கூறுகிறார்

ஜெத்தா, ஏப்ரல் 21

தாக்குதலும் பதில் தாக்குதலும் இனப் பிரச்சினையைத் தீர்க்க உதவாது.

இப்படி சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதர் ஜனாப் ஏ. எல். முகமது ஹாஷிம் பேட்டி ஒன்றில் சொன்னார்.

பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படக்கூடிய அறிகுறி உண்டா?

பதில்: இனப்பிரச்சினை புதியது ஒன்று அல்ல. உண்மையில் 1956 இல் தான் பிரச்சினை ஆரம்பமானது.

தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழ போடமறுக்கும்போது பேச்சுக்களை நடத்துவது கஷ்டம். பேச்சுக்கள் நடத்தும் சூழ்நிலை உருவாக வேண்டும். தாக்குதலும் பதில் தாக்குதலும் பிரச்சினையைத் தீர்க்காது. அரசியல் தீர்வு ஒன்றைக் காண நல்ல சிந்தனை அனைவருக்கும் ஏற்படும் என்று நம்புகின்றேன். எவ்வளவு விரைவில் தீர்வு காணப்படுகிறதோ அவ்வளவுக்கு எல்லாருக்கும் நன்மை கிடைக்கும்.

கேள்வி: 1956க்கு முன்னர் தமிழர்கள் 50க்கு 50 சம உரிமை கேட்டார்கள். பின்னர் சமஷ்டி அரசமைப்பு ஒன்றைக் கேட்டார்கள். தமிழ்க் காங்கிரஸில் இருந்து வெளியேறி பின்னர் தமிழரசுக்கட்சியை அமைத்தார்கள். அப்படித்தானே.

பதில்: சுதந்திரம் பெற்ற உடன்தான் இவை நடைபெற்றன. உண்மையில் பிரச்சினை தொடங்கியது சிங்கள மட்டும் சட்டம் 1956 இல் நிறைவேற்றப்பட்ட பின்னர்தான்.

கேள்வி: சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தமிழர் தீவிரவாதிகள் அல்லது தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறதே. உங்களுக்கு ஏதாவது தகவல் கிடைத்துள்ளதா?

பதில்: அப்படிக் கூறப்படுவதை நான் முற்றாக நிராகரிக்கின்றேன் எல்லாத் தமிழரும் தீவிரவாதிகள் அல்லது தீவிரவாதிகளின் ஆதரவாளர் என்று சொல்ல முடியாது.

பெரும்பான்மையான தமிழர் ஐக்கிய இலங்கையினுள் வாழ்வதையே விரும்புகின்றனர் என்பதை பயமின்றிக் கூறுவேன்

கேள்வி: இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவு சில காரியங்களுக்காக திறக்கப்பட்டதாக ஓர் அமைச்சர் குறிப்பிட்டார். அந்தக் காரியம் எப்போது முடியும்? எப்போது அந்தப் பிரிவு மூடப்படும்?

பதில்: இனப்பிரச்சினை தீர்ந்தவுடன், இஸ்ரவேல் பிரிவும் மூடப்படும்.

## மே தினத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப் 22

மே தினத்தை ஒட்டி தீவுப்பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துவது குறித்து ஆலோசிப்பதற்காக இலங்கை ஆசிரியர் சங்க ஊர்காவற்றுறை வட்டாரக்கிளை ஒரு கூட்டத்தை நாளை 23 ஆம் திகதி காலை சரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்தில் நடத்த ஏற்பாடு செய்து உள்ளது.

தொழிலாளர் ஸ்தாபனங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளன.

## பிரஜைகள் குழுவும் கேட்கிறது

பருத்தித்துறை,ஏப்ரல் 22

கடற் படையினரால் கைது செய்யப்பட்ட நல்லூர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் டாக்டர் ம. சசிதரனை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறைப் பிரஜைகள்குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் யாழ். அரசாங்க அதிபர், பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளைக் கேட்டுள்ளார்:

## ஹமீத் - பண்டாரி 2 மணி நேரம் பேச்சு

புதுடில்லி, ஏப்ரல் 21

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அளிக்கப்பட்ட தனிப்பட்ட விருந்துபசாரத்தில் திரு.ரொமேஷ் பண்டாரி கலந்து கொண்டார்.

அங்கு வைத்து இரண்டு மணித்தியாலங்கள் வரையில் வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது, திரு.ரொமேஷ் பண்டாரியுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இதன் முன்னர் ஜனாப். சாஹுல் ஹமீது - பிரதமர் ராஜீவ்காந்தி சந்திப்பு 20 நிமிடங்கள் தான் நீடித்தது

வெளிவிவகார அமைச்சர் பலிராம் பகத், வெளியுறவு கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியை ஜனாப். சாஹுல் ஹமீது சில நிமிட நேரங்களே சந்தித்துப் பேசினார்.

## தமிழர் அமைப்புகளை பண்டாரி விரைவில் சென்னையில் சந்திப்பார்

புதுடில்லி, ஏப்ரல் 21

இலங்கை அரசு சமர்ப்பித்த புதிய யோசனைகள் பற்றி தமிழர் அமைப்புக்களின் கருத்துக்களை நேரடியாக அறிந்து கொள்ள திரு. ரொமேஷ் பண்டாரி, சென்னை செல்லவிருக்கின்றார். தமிழர் அமைப்புக்களிடம் புதிய மாற்றுயோசனைகள் ஏதாவதிருப்பின் அவற்றை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு எடுத்துச் சொல்ல திரு. ரொமேஷ் பண்டாரி கொழும்புக்கு செல்லக்கூடும்.

## ஜனாதிபதியை ஹமீத் சந்தித்தார்

கொழும்பு, ஏப்ரல் 22

புதுடில்லியில் இருந்து திரும்பிய வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீத் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்தார்.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து புதிய யோசனைகளை ஹமீத் கையளித்தார்.

அது சம்பந்தமான கலந்துரையாடல்கள் பற்றிய விபரங்களை அமைச்சர் ஹமீத், ஜனாதிபதிக்கு நேற்று எடுத்துச் சொன்னார்.

இச் சந்திப்பின்போது அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் சமூகமளித்து இருந்தார்.

## மண்டான் பகுதியிலும் தாக்குதல்!

சரவெட்டி, ஏப்ரல் 22

மண்டான், வல்லை பகுதிகளிலும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் இடம் பெற்றன.

மண்டான் பகுதியில் ஹெலிக்கொப்டர், தாக்குதலை மேற்கொண்ட போது அத்தாக்குதலுக்கு எதிர் தாக்குதலை அங்கு நின்ற போராளிகள் மேற்கொண்டனர்.

அவ்வேளை மேலெழுந்து அப்பகுதியை வட்டமிட்டு ஹெலிக்கொப்டர் சுட்டது

இராய் பிள்ளையார் ஆலய உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மண்டான் பகுதியில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடந்த போது பக்தர்கள் பீதி அடைந்தனர்.

## சந்நிதி தேர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயம் அடைந்தவர்கள் அவசரம் அவசரமாக அநுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

விமானம் வந்தது

காலைகமார் 7-45மணி மணியளவில் தெற்குப் புறமாக இருந்து பெரிய விமானம் ஒன்று தொண்டமானாறுநோக்கி மிகத் தாழப் பறந்தவாறு பறந்து பலாலி விமான நிலையப்பக்கமாகத் திரும்பிச் சென்றது.

இவ்விமானத்தை நோக்கியும் போராளிகளால் ரொக்கட்லோஞ்சர் ஏவப்பட்டது.

இவ்விமானம் பலாலியை அண்மித்ததும் பலாலி இராணுவமுகாமிலிருந்து கரும்புகை நிறமுடைய ஹெலிக்கொப்டர் ஒன்று தொண்டமானாறு நோக்கிவந்தது.

தொண்டமானாறுமுகாமுக்குச் சமீபமாக உள்ள கெருடாவில்,உடுப்பிட்டி, வல்வெட்டி, வல்லைப் பக்கமாக ஹெலிக்கொப்டர் தாக்குதலை மேற் கொண்டது.

சுமார் இரண்டு மணி நேரமாக நடந்த ஹெலிக்கொப்டர் தாக்குதலை எதிர்த்து ஹெலிக்கொப்டர்மீது போராளிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 9-45 மணிக்கு அச்சுவேலி வடக்கு பக்கமாகவும் ஹெலிக்கொப்டர் ரோந்துபுரிந்து சுட்டது.

தொண்டமானாறு முகாமில் இருந்து ஏவப்பட்ட 'ஷெல்' மாதுளில் வெளியில்விழுந்துவெடித்ததில் அங்குள்ள சில பற்றைகள்கூடக் கருகின.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து நேற்றுமாலை 6-00 மணிவரை பீரங்கிச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன

வளலாய், இடைக்காடு, அச்சுவேலி, வல்வெட்டி, வல்லை, நெல்லியடி, மண்டான், உடுப்பிட்டி ஆகிய இடங்களில் பெரும் பதற்றம் நிலவியது

கோவிலின் தென்கிழக்குப் பக்கமாக உள்ள மடமே எரிக்கப்பட்டிருக்கிறது.

பல லட்சம் ரூபா பெறுமதியான புதிய சித்திரத் தேர் எரிப்புச் சம்பந்தமாக கேள்விப்பட்ட பல பக்தர்கள் கண்ணீர் விட்டு அழுததையும் உணர்ச்சி வசப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

கொழும்பிலிருந்து வந்தனர்

இராணுவ உயர் அதிகாரிகள் நேற்று கொழும்பில் இருந்து ஹெலிக்கொப்டரில் தொண்டமானாறு இராணுவமுகாமுக்கு வந்து நிலைமையை நேரில் அவதானித்தனர் என்று தெரியவருகிறது.

நேற்றைய சம்பவங்களை அறிந்து பொதுமக்கள் பலர் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுள்ளனர்.

## புதிய யோசனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசத் தயார் இல்லை என்று திரு. ஜெயவர்த்தன பிடிவாதமாக இருக்கிறார்.

மாவட்ட சபைகள் விரும்பினால் மாகாண சபையாக இயங்கலாம்; அப்படிச் சேர்ந்த பின்னர் விரும்பினால் பிரிந்தும் போகலாம் என்ற நிபந்தனையைக் கைவிடத் தயாராக உள்ள திரு. ஜெயவர்த்தன, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் இணைக்கக் கூடிய வலய இணைப்பு ஒன்று பற்றி இக்கட்டத்திலும் சிந்திக்க தயக்கம் காட்டுகின்றார்.

இலங்கை அரசின் புதிய யோசனைகள் மேலதிக சலுகைகளைக் கொடுப்பதாக அமையவில்லை. மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள் எந்த ரீதியில் அமையும் என்பது பற்றி புதிய யோசனைகளில் தெரிவிக்கப்படவில்லை.

இப்படி திரு. ரெட்டி கூறியுள்ளார்.

## கந்தளாய் சொல்லும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டனர்.

கடைசியாக அந்தத் தம்பதிகளின் இன்னொரு பிள்ளை ஏற்றப்படவேண்டும். கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஹெலிக்கொப்டருக்குள் இறங்கவேண்டியது தான் பாக்கி.

விதி சதி செய்துவிட்டது. கயிற்றைப் பிடித்து இருந்த கை நழுவிவிட்டது. அந்தப் பிள்ளை நீரில் விழுந்து விட்டது.

ஹெலிக்கொப்டரில் இருந்தவாறு தாய், தந்தையர் பார்க்க அந்தப் பிள்ளை வெள்ளத்திலே அள்ளுண்டு போனது.

சிவப்பிரகாசம் தம்பதிகளின் புதல்வனுக்கு நேர்ந்த கதி இது.

*

வெள்ளம் வருகிறது என்று அறிந்தவுடன் சந்தளாயில் ஒரு தம்பதி, வீட்டின் கூரை மீது ஏறி இருந்து கொண்டனர்.

வெள்ளம் வீட்டின் மேலாகவும் பாயவே, தம்பதியும் அள்ளுண்டு போனார்கள்.

அப்படி அள்ளுண்டுபோன தம்பதியின் கதி இன்னும் தெரியவில்லை.

கந்தளாய்க் கோ[illegible] குடும்பங்களின் கதி இன்[illegible]

கந்தளாய் தந்த கண்ணீர்க் கதைகள் இன்னும் எத்தனையோ!

## சிறுவன் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு அவசர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரின் காலிலும், கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அதேசமயம் தொண்டமானாற்றில் இராணுவ முகாம் பகுதியிலிருந்து வந்த துப்பாக்கி வேட்டினால் சரவெட்டியைச் சேர்ந்த திரு. அலன் (வயது 23) என்னும் இளைஞர் வயிற்றில் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி காயமுற்றார்.

நேற்றுக் காலை 9.00 மணி அளவில் தொண்டமானாற்றுப் பகுதியில் பலத்த பதற்றம் ஏற்பட்டது. பிரயாணிகளுடன் வந்த மினிபஸ் ஒன்றை ஹெலிக்கொப்டரில் வந்தவர்கள் கலைத்துச் சுட முயன்றபோது அவ் வாகனம் தப்பித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிளிநொச்சி ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றனர்.

இவர்கள் வீதிகளில் சென்ற சமயம் இடைக்கிடையே துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர்.

வழியில் வந்தவர்களை மறித்து சோதனையிட்டனர்.

இதனால் திருவையாறு, இரத்தினபுரம், இரணைமடுப் பகுதி மக்கள் பீதி அடைந்தனர். வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்தது

இதே வேளை இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெறும் இவ்வேளை சிப்பாய்கள் அப்பகுதிக்கும் சென்றதால் பொதுமக்கள் அச்சம் கொண்டிருந்தனர்.

சிப்பாய்கள் கனகாம்பிகை அம்பாள் ஆலயத்திலுள்ளும் சென்று விசாரித்துவிட்டு பின்னர் வட்டக்கச்சி சென்றனர் என்று பிந்திய செய்திகள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org